| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | மதுரை | காலம் : | 31/08/2022 | முதல் | 04/09/2022 | |
| அறிக்கை எண் : | 069/ 2022 | வெளியீட்டு நாள் : | 30/08/2022 | | | |

## மதுரை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33° - 36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (25.08.2022 முதல் 29.08.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 04-09-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25/08 | 26/08 | 27/08 | 28/08 | 29/08 | தேதி | நாள்-1 31/08 | நாள்-2 01/09 | நாள்-3 02/09 | நாள்-4 03/09 | நாள்-5 04/09 |
| 0.0 | 1.5 | 50.3 | 9.4 | 13.5 | மழை (மி.மீ) | 10 | 22 | 14 | 6 | 4 |
| 33 | 36 | 35 | 33 | 35 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 34 | 34 | 33 | 34 | 34 |
| 25 | 24 | 22 | 24 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 23 | 24 | 24 |
| 6 | 6 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 7 | 7 | 6 | 5 |
| 62 | 81 | 86 | 77 | 81 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 80 | 75 | 70 | 70 |
| 70 | 90 | 73 | 51 | 63 | | 60 | 65 | 65 | 60 | 55 |
| 8 | 12 | 9 | 4 | 10 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 4 | 4 | 4 | 4 |
| மேற்கு | தென் கிழக்கு | மேற்கு | தென்மே மேற்கு | தென்மே மேற்கு | **காற்றின் திசை** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** | **தென் மேற்கு** |

**குறுஞ்செய்தி** :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 3 நாட்களுக்கு மிதமான மழையும், செப்டம்பர் 3, 4 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 33°-34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23°-24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

**கனமழை எச்சரிக்கை:**

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஆகஸ்ட் 31, செப்டம்பர் 1, 2ம் தேதிகளில் கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரிசெய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும், கால்நடைகளை

மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

கடந்த சில நாட்களாக ஓரளவு மழைப் பொழிவு பெறப்பட்டுள்ளதாலும், அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதாலும் விவசாயிகள் உழவு செய்தல் மற்றும் நிலம் தயாரித்தல் வேலைகளுக்கு திட்டமிடலாம். ஏற்கனவே தயார் நிலையில் உள்ள நிலங்களில் விதைப்பு \ நடவு செய்யும் பணிகளை துவங்கலாம். மேலும் விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக் குட்டைகள் மற்றும் நீர் நிலைகளை சரி செய்து மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மருந்து தெளிக்கும் வேலைகளை சிறிது காலத்திற்கு ஒத்தி வைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : பருத்தி,** வாழை, கால்நடை.

**பருத்தி:**

- ❖ பருத்தியில் உள்ள ஊட்டச்சத்து குறைபாட்டை சரிசெய்ய, பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் விதைத்த நாளிலிருந்து 10-15 நாட்களுக்குள் நுண்ணூட்டச் சத்துக்களை இடவேண்டும்.
- ❖ ஏக்கருக்கு 5 கிலோ பருத்தி நுண்ணூட்டம் அல்லது 20 கிலோ மெக்னீசியம் சல்பேட் உரத்தினை வைத்து நுண்ணூட்டசத்து குறைபாட்டினை நிவர்த்தி செய்யலாம்.

வாழை:

- ❖ வாழைப்பயிரில் அசுவினி கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி பாஸ்போமிடான் கலந்து தண்டின் மேலிருந்து அடி வரை 21 நாள் இடைவெளியில் 3 முறை தெளிக்க வேண்டும்.

கால்நடை:

❖இடி மின்னல் தாக்குதலிலிருந்து இருந்து கால்நடைகளை பாதுகாக்க விவசாயிகள் கால்நடைகளை மழை கருக்கல் வரும் நேரங்களில் மேய்ச்சச்லுக்கு அனுப்பகூடாது.

❖ மேலும் மந்தையாக மேயும் வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகளை மின்னல் தாக்கும் வாய்ப்பு உள்ளது.

❖கால்நடைகளை முள் கம்பி வேலியில் அல்லது மரங்களின் அருகில் கட்டுவதை தவிர்க்க வேண்டும்.

❖மலைப்பாங்கான குன்று மற்றும் மேடு பள்ளமான பகுதிகளில் மின்னல் தாக்கம் அதிகமாக இருக்கும்.